FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

## Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | மனைப்பொருளியல் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ ***1 - 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய விடைத்தாளில் (✕) இடுவதன் மூலம் காட்டுக.***

01) “மனையினுள் அங்குமிங்கும் வசதியாக நடமாடக்கூடிய வகையில் மனைப் பகுதிகளை திட்டமிடுவதுடன், அந்தரங்க தன்மைக்கு இடையூறு ஏற்படாது அடுத்த பகுதிக்கு இலகுவாக செல்லக் கூடியதாக திட்டமிடுவது

1) நெகிழ்ச்சித் தன்மை  2) பாதுகாப்பு  3) நடமாடல் சௌகரியம்
4) உடல்நலம்  5) அந்தரங்கத் தன்மை

02) அலுமினியம் / இரும்பு / கண்ணாடி நார் கதவுகளை தற்காலத்தில் அதிகம் பாவனை செய்வதற்கு காரணமான சரியான கூற்று

A - நீடித்த உழைப்பு  B - வெவ்வேறு நிறம், வடிவத்தில் பெறலாம்
C - விலை அதிகம்  D - கனதியான தன்மை

1) A, B  2) B, C  3) C, D
4) A, C  5) B, D

03)



(i)



(ii)



(iii)

இங்கு வீட்டுமுகப்பு, இருக்கைத் தொகுதி, படிக்கட்டு ஆகியன வெளிப்படுத்தும் காட்டுரு கோட்பாடு முறையே

1) சந்தம், வலியுறுத்தல், சமச்சீரில் நிலை
2) விகிதசமம், மீண்டுவருதல், ஆரை விரிகோட்டு சந்தம்
3) ஒழுங்குமுறை சந்தம், மீண்டுவரல் சந்தம், பெயர்வு சந்தம்
4) சமச்சீர் நிலை, பெயர்வு சந்தம், மீண்டுவரல் சந்தம்
5) பெயர்வு, விகிதசமம்

04) சூரியஒளி குறைவாக கிடைக்கும் அறை ஒன்றுக்கு பொருத்தமான நிற பூச்சுவகை

1) செம்மஞ்சள், மஞ்சள் செம்மஞ்சள், சிவப்பு செம்மஞ்சள்
2) சிவப்பூதா, நீலப்பச்சை, மஞ்சட்பச்சை
3) செம்மஞ்சள், மஞ்சள் பச்சை, பச்சை
4) நீல ஊதா, நீலப்பச்சை, சிவப்பூதா
5) கறுப்பு, வெள்ளை, சாம்பல்

05) பின்வருவனவற்றில் சுத்தமான குடிநீரின் தன்மைகளாக அமைவது

A - தொங்கல் நிலைப்பொருளோ, வீழ்படிவோ கொண்டிராமை

B - மீதேன் போன்ற தீங்கான வாயுவை கொண்டுள்ளமை

C - சிறப்பான pH பெறுமானம் கொண்டிருத்தல் (நடுநிலை)

D - நோயாக்கி அங்கி அடங்கியுள்ளமை

1) A, B    2) C, D    3) A, C
4) B, D    5) A, D

06) மனைக்கழிவு முகாமையில் திண்ம கழிவுகளை முகாமை செய்யும் முறையில் அடங்காதது.

1) கூட்டெரு பீப்பாய்    2) உக்காத கழிவை மீள் சுழற்சி
3) குப்பைகூள பையில் சேகரித்தல்    4) குப்பைகூள வாளி
5) மண்ணில் புதைத்தல்

07) 

படத்தில் காட்டப்பட்டுள்ள திரைச்சீலை வகையின் பெயர்

1) கெபே    2) பிரிசிலா    3) கொட்டேஜ்
4) கிறிஸ்ரோல்    5) கடேல்

08) பல் நிரம்ப கொழுப்பமிலமான ஒமேகா 3 அமிலங்களில் அடங்குபவை

1) அல்பாலினோலெனிக்கமிலம், எயிகோசா பென்ரனெராயிக்கமிலம், டெரக்கோசா எக்சானெயிக்கமிலம்
2) பாலினோலெயிக் அமிலம், காமா லினோலெனிக்கமிலம், அரக்கிடோனிக்கமிலம்
3) மிஸ்ரிக்கமிலம், தியரிக்கமிலம், பாமிற்றிக்கமிலம்
4) மிஸ்ரிக்கமிலம், அரக்டோனிக்கமிலம், ஓலேயிக்கமிலம்
5) கப்ரிக்கமிலம், பென்சோயிக்கமிலம், தியரிக்கமிலம்

09) விற்றமின் $B_9$ இன் இரசாயனப் பெயர்

1) தயமின்    2) ரைபோபிளேவின்    3) போலிக்கமிலம்
4) பயோட்டின்    5) போலைன்

10) பின்வரும் கூட்டத்தில் நுண் கனியுப்பு தொகுதியில் அடங்குபவை

1) கல்சியம், பொஸ்பரஸ், குளோரைட்டு    2) இரும்பு, கந்தகம், பொற்றாசியம்
3) புளோரைட், மக்னீசியம், சோடியம்    4) செப்பு, கந்தகம், அயடீன்
5) இரும்பு, அயடீன், நாகம்

11) பாண் வாட்டுதலின் போது நடைபெறும் இரசாயன மாற்றம்

1) அமைலோஸ் ஆனது அமைலோ பெக்ரின் ஆக மாற்றப்படும்.
2) மாப்பொருள் பெக்ரிக் ஆக மாற்றப்படும்.
3) மாப்பொருள் டெக்ஸ்ரின் ஆக மாற்றப்படும்.
4) மோல்ரோசு டெக்ஸ்ரின் ஆக மாற்றப்படும்.
5) அமைலோபெக்ரின் அமைலோசாக மாற்றப்படும்

12) மாணவ செயற்பாட்டில் முன்வைக்கப்பட்ட கனிப்பொருள் ஒன்றின் தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

✶ ஈமோகுளோபின் உற்பத்தி

✶ குருதியை கொண்டு செல்லல் களஞ்சியப்படுத்தல் ஊடகம்

✶ தசையிழைய மயோனுளோபின் உற்பத்தி

இவ் கனிப்பொருள்

1) நாகம்    2) கல்சியம்    3) அயடீன்
4) பொற்றாசியம்    5) இரும்பு

13) அமினோ அமிலம் எச்சேர்வையால் ஆனது

1) அமைனோக் கூட்டமும் ($NH_2$) கபொக்சின் கூட்டமும் (COOH)

2) கிளைசீனும் ($CH_2$) அலனீன் கூட்டமும் ($H_8$)

3) கிளைசீனும் ($CH_2$) அமைனோக் கூட்டமும் ($NH_2$)

4) ஒலோயிக்கமிலமும் ($C_{18}$) கிளிசரோலும் ($C_3H_8$)

5) அல்கைல் கூட்டமும் (R) கபொட்சின் கூட்டமும் (COOH)

14) பதப்படுத்தப்பட்ட பழக் கலவையை போத்தலில் நீண்டநாள் பாதுகாக்க பயன்படுத்தும் இரசாயன பதார்த்தம்

1) நைத்திரிக்கமிலம்
2) பொற்றாசியம் மெற்றாபைசல்பைற்று
3) பென்சோயிக்கமிலம்
4) சோடியம் நைத்திரேற்று
5) புரோப்பிலின்

15) மாவையும், கொழுப்பையும் விரல் நுனியால் கலக்கும் பேஸ்ட்ரி வகை

1) பப்பேஸ்ரி
2) ஷுபேஸ்ரி
3) கிஸ்ஸஸ்
4) சோட்க்ரஸ்பேஸ்ரி
5) மீன் பனிஸ்

16) விற்றமின் A, D, E, K உணவுகளை சமைக்கும் போது சேர்க்க வேண்டிய உணவுப் பொருள்

1) எண்ணெய் / தேங்காய்
2) நீர் / பால்
3) தேன் / தேங்காய்
4) முட்டை / மீன்
5) மரக்கறி நீர் / கொதிநீர்

17) ஒரு நபரின் உடற்திணிவுச் சுட்டியை (BMI) கணிக்கும் சரியான முறை

1) $\frac{\text{நிறை } (kg)}{\text{உயரம்} (m)}$
2) $\frac{\text{நிறை } (kg)}{\text{உயரம் } (m)^2}$
3) $\frac{\text{உயரம் } (m)}{\text{நிறை } (kg)^2}$
4) $\frac{\text{உயரம் } (m)^2}{\text{நிறை } (kg)}$
5) $\frac{\text{நிறை } (kg)^2}{\text{உயரம் } (m)}$

18) திருமதி. அன்ரன் நெஞ்சுவலி காரணமான வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது தெரிய வந்தது. அவருக்கு உகந்த மதிய உணவு வேளை

1) புழுங்கல் சோறு, இறைச்சிக்கறி, முட்டைப் பொரியல், சலாது, மீன் சம்பல்

2) தவிட்டரிசி சோறு, மீன்சுவையூன் கறி, போஞ்சி பால் கறி, இறால் டெவில்

3) தவிட்டரிசி சோறு, மீன் குழம்பு, கத்தரிக்காய் கறி, கரட் போஞ்சி கறி, கெக்கரிக்காய் சம்பல்

4) புழுங்கல் அரிசி சோறு, இறைச்சி சுவையூன்கறி, மசாலா சேர்ந்த மீன்கறி, சலாதிலை சம்பல்

5) பச்சையரிசி சோறு, மீன் தீயல், முட்டை பொரியல், பீற்றூட் சலாது, கடலைக்கறி

19) உணவுக் கூம்பு அடிப்படையில் நாளொன்றுக்கு உணவு வேளை திட்டமிடும் போது தானியங்கள் சேர்க்க வேண்டிய அலகு

1) 1 - 2 அலகு
2) 2 - 3 அலகு
3) 1 - 4 அலகு
4) 1 - 5 அலகு
5) 6 - 12 அலகு

20) குருதியமுக்க நோயாளியின் குருதியமுக்கத்தை அளவிடும் கருவி

1) பாகைமானி
2) இரசமானி
3) இரசமனோமானி
4) மழைமானி
5) வெப்பமானி

21) இரைப்பை அழற்சியில் தாக்கம் செலுத்தும் பற்றீரியா எவை?

1) எலிசோபற்றக் பைலேளி
2) சூடோமோனஸ்
3) ஸ்ரெப்ரோகொக்கஸ்
4) மைகோ பற்றீரியர்
5) லக்ரோ பஸிலஸ்

22) சமிபாட்டு தொகுதியுடன் தொடர்பான மலச்சிக்கல் நோயால் அவதியுறும் கவிதாவுக்கு மதிய உணவில் சேர்க்கக்கூடிய காய்கறி தொகுதி

1) பீற்றூட், கோவா
2) கொகிலை, சுரைக்காய்
3) ஊருளைக்கிழங்கு, வற்றாளை
4) புதினா, சோயா
5) தினை, கொள்ளு

23) மாணவ குழுவால் பாலை தயிராக மாற்றும் செயன்முறைச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்பாட்டால் (நொதித்தல்) அதிகரிக்கும் போசணை பற்றிய சரியான கூற்று எது?

A - கொழுப்பமிலம், விற்றமின் B, C அதிகரிக்கும்

B - கொழுப்பு, காபோதைரேற்று அதிகரிக்கும்

C - அத்தியாவசிய அமினோ அமிலம் அதிகரிக்கும்

D - சுவை, மணம், இழையமைப்பு மாறுபடாது

1) A, B
2) A, C
3) A, D
4) B, C
5) C, D

24) சிபார்சு செய்யப்பட்ட நாளாந்த போசணைத் தேவை (2007) அட்டவணைப்படி கல்சியம் அதிகம் தேவைப்படும் பருவத்தினர்

1) குழந்தைப் பருவம்
2) பிள்ளைப் பருவம்
3) கட்டிளமைப் பருவம்
4) வயோதிபப் பருவம்
5) கர்ப்பிணிப் பருவம்

25) உணவு பதனிடலில் ஒட்சியெதிரியாக பயன்படும் விற்றமின்கள்

1) விற்றமின் C, E
2) விற்றமின் A, E
3) விற்றமின் E, K
4) விற்றமின் C, D
5) விற்றமின் A, D

26) உணவு பொதியிடலில் பயன்படுத்தும் வாயு வகை

1) மீதேன்
2) ஒட்சிசன்
3) காபனீரொட்சைட்
4) நைதரசன்
5) ஐதரசன்

27) உணவு தயாரித்தல் தடிப்பாக்கிகளாக பயன்படுத்த **முடியாதது**.

1) கோதுமை மா
2) கோர்ன் பிளவர்
3) அரட்டுமா
4) சோய்
5) மாஜரீன்

28) உணவு நற்காப்பில் பயன்படும் இரண்டு வகையான சேதன உப்புக்கள்

1) சோடியம் நைத்திரேற்று, சோடியம் குளோரைட்டு
2) சோடியம் பென்சோவேற்று, சோடியம் றெமியுனேற்று
3) சோடியம் குளோரைட்டு, சோடியம் பைசல்பேற்று
4) சோடியமொட்சைட், சோடியம் புறப்பியனேற்று
5) சோடியம் சித்தரேற்று, சோடியம் நைத்திரேற்று

29) பெருங்குடலிலுள்ள பற்றீரியாவால் தொகுக்கப்படும் விற்றமின்கள்

1) விற்றமின் A, D
2) விற்றமின் K, B
3) விற்றமின் C, E
4) விற்றமின் A, K
5) விற்றமின் B, C

30) புரத சமிபாடு ஆரம்பமாகும் இடம்

1) முன்சிறுகுடல்
2) களம்
3) வாய்குழி
4) இரைப்பை
5) பெருங்குடல்

31) உடலில் நைதரசன் சமநிலை ஏற்படுவதற்கான எடுத்துக்காட்டு

1) நோயிலிருந்து உடல் தேறுதல்
2) வளர்ச்சி பருவத்தின் போது
3) கர்ப்பநிலை போது
4) கருமையான தீக்காயத்தின் போது
5) பாலூட்டும் நிலையின் போது

32) கொழுப்புச் சமிபாட்டில் தொழிற்படும் நொதியம்
1) அமைலேசு
2) சுக்ரோசு
3) லக்ரோசு
4) பெப்ரிடேஸ்
5) இலிப்பேஸ்

33) உணவு சமிபாடடைந்த பின் குருதியினால் நேரடியாக அகத்துறிஞ்சப்படாதது
1) குளுக்கோஸ்
2) அமினோ அமிலம்
3) நீண்ட சங்கிலி கொழுப்பமிலம்
4) குறுகிய சங்கிலி கொழுப்பமிலம்
5) பிரக்ரோசு

34) அனுசேபம் எத்தனை வகைப்படும்?
1) 2
2) 3
3) 4
4) 5
5) 6

35) கர்ப்ப காலத்தில் இரும்பு பூரணப்படுத்தலுக்காக வழங்கப்படும் வில்லையும் அளவும்
1) பெரஸ்ஒக்சைட் - $120mg$
2) பெரஸ்சல்பேற்று - $150mg$
3) பொலிக்கமிலம் - $100mg$
4) பொசுபேற்று - $75mg$
5) பெரஸ்பொசுபேற்று - $50mg$

36) கர்ப்ப காலத்தில் பிணியாய் நிலையத்தில் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படாத பரிசோதனை
1) ஈமோகுளோபின் மட்டம்
2) RH காரணி
3) VORL பரிசோதனை
4) குருதிச் செறிவும் வகையும்
5) சிறுநீர் பரிசோதனை

37) குழந்தைப் பருவம் எனக் குறிப்பிடப்படுவது
1) $0 - 28$ நாள்
2) $1$ மாதம் $-1$ வயது
3) $01 - 05$ வயது
4) $5 - 9$ வயது
5) $9 - 20$ வயது

38) குழந்தைப் பருவத்தின் உடல் விருத்தியில் அடங்காத இயல்பு
1) வேகமான உடல் வளர்ச்சி காணப்படும்
2) 5ம் மாதமாகும் போது பிறப்பு நிறை இருமடங்காகும்
3) ஒரு வருடமாகும் போது பிறப்பு நிறை 3 மடங்காகும்
4) உடலை விட தலை பெரிது
5) பல் முளைத்தல்

39) கர்ப்பிணிப் பருவ காலம் எனக் கருதப்படுவது
1) 28 வாரம்
2) 32 வாரம்
3) 36 வாரம்
4) 40 வாரம்
5) 44 வாரம்

40) முளையப் பருவம் எனப்படுவது
1) கருக்கட்டல் - 2 மாதம் வரை
2) கருமுதிர்ச்சியிலிருந்து - 14 நாள் வரை
3) 2 மாதம் முதல் - 6 மாதம் வரை
4) 4 மாதம் - 6 மாதம் வரை
5) 6 மாதம் - 10 மாதம் வரை

41) நிலைமாறும் / புயல் வீசும் பருவம் எனப்படுவது
1) குழந்தைப் பருவம்
2) பிள்ளைப் பருவம்
3) கட்டிளம் பருவம்
4) கர்ப்பிணிப் பருவம்
5) வயோதிபப் பருவம்

42) பிள்ளைப் பருவ பிள்ளைகளின் அசாதாரண நடத்தையல்லாதது
1) தனிமை நாடல்
2) முரண்படல்
3) நெறி பிறழ்வு
4) குழுவாக இயங்கல்
5) விரல் சூப்புதல்

43) பின்வரும் தையல் முறையில் அடிப்படைத் தையலும், தையல் நுட்பமுறையும் முறையே
1) சோம் தையல், தட்டைப் பொருத்து, பிரான்சிய முடிச்சு
2) சிறுநூலோடி, கம்பளி, நரம்புத் தையல்
3) பிரான்சியப் பொருத்து, விஸ்பந்தையல், நீள்குறு தையல்
4) தோற்றாத் தையல், முடிச்சுத் தையல், சங்கிலித் தையல்
5) கம்பளித் தையல், புழுத் தையல், மேற்செறி பொருத்து

44) சரிவுக்கோட்டுத் துணியை பொருத்தும் மிகச் சரியான படம்

1) 2) 3) 4) 5)



45)




இப்படத்தில் காட்டப்பட்ட தையல் வகை முறையே

1) ஈயுருத் தையல், இறகுத் தையல்
2) முறுக்குவடத் தையல், சிலந்திவலைத் தையல்
3) வெட்டுக்குத்துத் தையல், நீள்குறுக்கு தையல்
4) சிலந்திவலைத் தையல், ஈயுருத் தையல்
5) இறகுத் தையல், நீள்குறுக்குத் தையல்

46) பெண்ணின் அடிப்படை முன்பக்க மார்பளவு கணிக்கும் சரியான முறை

1) $\frac{\text{மார்பளவு } cm+5cm}{2} - 1.5cm + 2$
2) $\frac{\text{மார்பளவு } cm+5cm}{2} + 1.5cm \div 2$
3) $\frac{\text{மார்பளவு } cm+5cm}{4} + 1.5cm + 2$
4) $\frac{\text{மார்பளவு } cm+5cm}{4} - 1.5cm \div 2$
5) $\frac{\text{மார்பளவு } (cm)}{2} \div 2$

47) புடவை உற்பத்தியில் பயன்படும் அடிப்படை நெசவும், அலங்கார நெசவும் முறையே
1) சாதாரண நெசவு, ஜக்காட் நெசவு
2) டொபி நெசவு, பாவுவிலா நெசவு
3) ஊடைவிலா நெசவு, அலைச்சரிவு
4) தேன்கூட்டு நெசவு, சரிவு நெசவு

48) மாதிரியுரு தீர்மானிக்கும் போது, நேர் அளவீட்டை உள்ளடக்கிய தொகுதி
1) மார்பு, கழுத்து
2) இடுப்பு, தோள்
3) கை அடி, புயவுட்பக்கம்
4) குறுக்களவு வேல்மடிப்பு, இடுப்பு
5) தோள் அளவு, பக்கப்பொருத்து

49) மாணவகுழு நார்களை இனங்காண நுணுக்குக்காட்டி பரிசோதனையை மேற்கொண்டது. அதில் தட்டையான முறுக்குடைய, சிறு திரவ வடிவில் நீள்பக்க, குறுக்கு பக்க தோற்றம் ஒரு நாரில் இனங்காணப்பட்டது. அந்நார்வகை
1) கம்பளி 2) பட்டு 3) நைலோன் 4) பருத்தி 5) லினன்

50) தைக்கா விளிம்பை நேர்த்தியாக்கவும், கழுத்து நேர்த்தியாக்க பயன்படும் முறையே
1) வெட்டுக்குத்துத் தையல், மீன் முள்ளு
2) அலங்கார நுண்நாடா, மீன் முள்ளு
3) கம்பளி, உருவ முகப்புத் துண்டு
4) அலங்கார நுண்நாடா, விளிம்பு மூடி
5) உருவமுகப்பு, கம்பளித் தையல்

The National e-learning Portal for The General Education